
Tamil

Australian Government
Civil Aviation Safety Authority




# உங்கள் விமானத்தைத் தவறவிடுவது சரியல்ல. உள்நுழைவுப் பதிவின் போதோ அல்லது பாதுகாப்புச் சோதனையின் போதோ தாமதமாகும் அபாயத்தை ஏற்படுத்தாதீர்கள் – சரியானவற்றை அடுக்கி வைக்கவும்!

**ஆபத்தான பொருட்கள் என்பவை விமானத்தில் தீங்கு விளைவிக்கும் அல்லது பாதுகாப்பற்றதாக இருக்கும் சாமான்களாகும். அவை எளிதில் பற்றக்கூடியவையாகவோ, வெடிக்கும் தன்மையுள்ளவையாகவோ, நச்சுத்தன்மை கொண்டவையாகவோ அல்லது பிற பொருட்களுடன் ஆபத்தான முறையில் வினைபுரியக்கூடியவையாகவோ இருக்கலாம்.**

சில ஆபத்தான பொருட்கள் விமானங்களில் தடைசெய்யப்பட்டுள்ளன. மற்றவற்றைக் கொண்டு செல்லலாம், ஆனால் அது விமான நிறுவனத்தின் ஒப்புதலுடனோ அல்லது பிரத்தியேகமாக அடுக்கிக் கட்டுவதன் மூலமாகவோ மட்டுமே முடியும்.

பொதுவான ஆபத்தான பொருட்களில் பின்வருவன அடங்கும்:

- ‘வேப்ஸ்’ (vapes) மற்றும் இ-சிகரெட்டுகள்
- மின்கலன்கள் (batteries) மற்றும் ‘பவர் பேங்குகள்’ (power banks)
- ‘ஏரோசால்கள்’ (aerosols) மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருட்கள்
- துப்புரவுப் பொருட்கள் மற்றும் இரசாயனங்கள்
- எரிபொருட்கள் மற்றும் பெட்ரோலில் இயங்கும் பொருட்கள்
- தீப்பெட்டிகள், தீப்பற்றவைப்பான்கள் (lighters) மற்றும் பட்டாசுகள்.

**கையோடு கொண்டு செல்லும் (carry-on) மற்றும் சரிபார்க்கப்பட்ட (checked) பயணப் பெட்டிகளில் ஆபத்தான பொருட்கள் உள்ளனவா என்பதை விமான நிலையங்கள் வழக்கமாகச் சோதனை செய்யும். உங்கள் சரிபார்க்கப்பட்ட பயணப் பெட்டியில் ஆபத்தான பொருட்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டால், உங்கள் பெட்டி அகற்றப்படலாம், அத்துடன் நீங்கள் உங்கள் விமானப் பயணத்தைத் தவறவிடக்கூடும். நீங்கள் இணையவழியாகவோ அல்லது விமான நிலையத்திலோ உள்நுழைவுப் பதிவு (check in) செய்யும்போது, உங்கள் பயணப் பெட்டிகளில் ஆபத்தான பொருட்கள் ஏதேனும் உள்ளனவா என்பதை அறிவிக்க வேண்டும்.**

**நீங்கள் அறிவிக்கத் தவறினாலோ, அல்லது திசை திருப்பும் வகையில் அல்லது பொய்யான அறிவிப்பைச் செய்தாலோ, உங்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறை எனக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படலாம்.**

## பயண அறையில் (cabin) அனுமதிக்கப்படுபவை

### உங்களுக்கானது மட்டும்

சிகரெட் பற்றவைப்பான்கள்

தீக்குச்சிகள்

### கைப் பயணப் பெட்டியில் மட்டும்

'வேப்ஸ்' & இ-சிகரெட்டுகள்

லித்தியம்

'பவர் பேங்குகள்' & உதிரி மின்கலன்கள்

## உங்கள் விமான நிறுவனத்திடம் சரிபார்க்கவும்

மின்சக்திக் கருவிகள்

முகாம்களில் பயன்படுத்தும் அடுப்புகள்

வெடிமருந்துகள்

$O_2$

மருத்துவ வாயு உருளைகள்

## தடைசெய்யப்பட்ட பொருட்கள்

எரியக்கூடிய பொருட்கள்

வெளுக்கும் இரசாயனம்

நச்சுப் பொருள்

ஆக்ஸிஜ னேற்றிகள்

அரித்தெடுப் பான்கள்

மிளகு தெளிப்பான்

GAS

வாயு

வெடிபொருட்கள் பட்டாசுகள்

>160Wh

பெரிய மின்கலன்கள்

**நீங்கள் பறப்பதற்கு முன், இணையத்தில் அல்லது உங்கள் விமான நிறுவனத்திடம் சரிபார்க்கவும்.**
**casa.gov.au/packright**

**PACK RIGHT. SAFE FLIGHT.**

2502.5096